DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

**STC.No.269/2021**
Deposition of Witness for – Prosecution : PW1
Defence:

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : பாலுச்சாமி | | : | |
| த/பெ | : ராமசாமி | மதம் | : | |
| கிராமம் | : அயப்பாக்கம் | தொழில் | : | தனியார் நிறுவனம் |
| வட்டம் | : சென்னை | வயது | : | 50/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி – 11.11.2025**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி PW1</u>**

1. தற்போது நான் Sri Sakthi Insulation அயனம்பாக்கம் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எனது மாத சம்பளமானது ரூ.45,000/– ஆகும். நிறுவனத்தின் ஊழியர் ஆவேன். எனது சம்பள ரசீதை இவ்வழக்கில் தாக்கல் செய்ய தயாரா உள்ளேனா என்றால் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். இதற்கு முன்பாக Computer graphics பட்டரவாக்கத்தில் உள்ள நிறுவனத்தில் சுமார் 15 ஆண்டுகளாக வேலை பார்த்து வந்தேன். Computer graphics பட்டரவாக்கத்தில் உள்ள நிறுவனத்தில் வேலை பார்த்த சமயத்தில் தான் எதிரி என்னுடன் வேலை பார்த்தார் என்றால் சரிதான். வேலை பார்த்த காலத்தில் இருந்து எதிரிக்கு எனக்கு நன்கு பழக்கம் என்றால் சரிதான். எதிரி 20 ஆண்டுகாலம் பழக்கம். எதிரியின் குடும்ப

விவரம் நன்கு தெரியும் என்றால் சரியல்ல. எதிரி குணநலன் குறித்து எனக்கு நன்கு தெரியும் என்றால் எனக்கு ஓரளவிற்கு தெரியும். ரூ.2,00,000/- எவ்வாறு எதிரிக்கு தரப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிடவில்லை என்றால் தவறுதலாக ரூ.2,00,000/- என்று குறிப்பிடப்பட்டுள்ளது எதிரி தரவேண்டிய பணம் ரூ.2,09,173/- ஆகும். ரூ.2,09,173/- தொகை யாரின் முன்பாக தரப்பட்டது என்ற விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் ஆகியவற்றில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மொத்தத்தொகை ரூ.10,84,390/- எவ்வாறு எனக்கு வந்தது என்ற விவரத்தையும் வழக்கறிஞர் அறிவிப்பு, பிரமாண வாக்குமூலம் மற்றும் புகார் மனுவில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நான் எதிரியின் கடைக்கு அவ்வபோது போகும் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். ரூ.2,09,173/- கொடுத்ததற்கு ஆவணம் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் எதிரிக்கு ரூ.10,84,390/- கடனாக கொடுத்தேன் என்றால் பழக்கத்தின் பேரில் கொடுத்தேன். வட்டி வீதம் குறித்து எதுவும் நான் கேட்கவில்லை, ஆவணங்களிலும் குறிப்பிடவில்லை. என் குடும்பத்தில் நான், மனைவி, இரண்டு பிள்ளைகள் உள்ளார்கள். என் மனைவியுடன் பிறந்தவர்கள் 1 ஆண், 2 பெண் ஆவார். என் மனைவியுடன் பிறந்த 2 சகோதரிகளின் கணவர் சமூதாயத்தில் செல்வாக்கானவர்கள் என்றால்

சரியல்ல. பு.சா.ஆ.1 என்னுடைய ஐசிஐசிஐ Bank Statement ஆகும். அதில் யாருடைய பெயராவது உள்ளதா என்றால் மணி பெயர் உள்ளது. பு.சா.ஆ.1 என்னுடைய வங்கி கணக்கு என்பதற்கு அதில் என்னுடைய பெயர் உள்ளதா என்றால் இல்லை. பு.சா.ஆ.1 ஆவணத்தில் எனது வங்கி கணக்கு எண்.603801084241 உள்ளது, பெயர் இல்லை. பு.சா.ஆ.3 காசோலை யார் பூர்த்தி செய்தார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தொகை மற்ற விவரங்கள் எழுத்து எழுதியதற்கும் காசோலையில் உள்ள கையொப்பத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் உள்ளது போல் தெரிகிறது. பு.சா.ஆ.8 எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு நான் தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எதிரியின் கையொப்பம் உள்ளதா என்றால் இல்லை. Computer graphics நிறுவனத்தில் Credit Card மூலம் பணம் தேவைப்பட்டால் பொருள் தேவைப்படும் நபருக்கு பொருளை வாங்கி கொடுத்து பணத்தை Credit Card வைத்து கொடுத்து விடலாம் என்றால் எனக்கு தெரியாது. எதிரிக்கு தெரியாது என்றும், அவர் அப்பாவி என்பதால் குடும்பத்தின் எளிமை நிலை தெரிந்தும், போதி படிப்பறிவு இல்லை என்பதாலும், பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அச்சுறுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

MAHASAKTHI K

Digitally signed by MAHASAKTHI K